அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 22.37 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு ஈரோடு, சேலம், மதுரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்ட ஒன்றியங்களில் நாள் ஒன்றுக்கு 7 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பவுடர் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் தினசரி 2 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்வதைப்போல தற்போது வரக்கூடிய பாலினை வைத்துக்கொண்டு பால் பவுடர் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகள் 4 இடங்களில் இருக்கின்ற காரணத்தால், மீண்டும் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

11—

கட்டட வசதி

*28550—திரு. அ. தமிழரசு:

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2011 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராசிபுரத்தில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.465.26 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு அதன் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஒரு தாலுகா தலைமையிடமாகும். இந்த நீதிமன்றம் துவங்கி 50 வருடங்களுக்கு மேலாகின்றது. இதன் அவசியத்தைக் கருதி 465 இலட்சம் மதிப்பீட்டிலே நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி. இங்கே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் என 3 நீதிமன்றங்களும் தனியார் நகராட்சிக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. இதற்காக முத்துகாளிப்பட்டி என்ற கிராமத்திலே நிலம் தேர்வு செய்ததாகத் தகவல் இருக்கிறது. கிட்டத்தட்ட 300 வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். சுமார் 10,000 வழக்குகள் தேங்கியிருக்கின்ற நிலையிலே இந்த நீதிமன்றம் எப்போது கட்டப்படும்; இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரத்திலே Sub–Court, Judicial Magistrate Court, District Munsiff Court ஆகிய Court-கள் கட்டுவதற்காகத்தான் 402 இலட்சம் ரூபாயும், குடியிருப்பு கட்டுவதற்காக 62 இலட்சம் ரூபாயும் ஆக 465.26 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. Tender விடப்பட்டது. 24–11–2010 அன்று Tender விடப்பட்டு, அது Tender Approval Committee-க்கு போயிருக்கிறது. இந்த வாரம் Approval

[2011 பிப்ரவரி 7

Committee-யில் அது Clear ஆகிவிடும். உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே ஓமலூரிலே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அதற்கான பணி தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது. தற்போது நடந்து கொண்டிருக்கிற அந்த நீதிமன்றத்திலே சிவில் வழக்கு, கிரிமினல் வழக்கு என அனைத்தும் ஒன்றாக இணைந்து நடப்பதினாலே அங்கு 5,000 சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் தேங்கியிருக்கின்றன. 1984 ஆம் ஆண்டு வழக்குகூட தேங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் முன்பே அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, கிரிமினல் வழக்கும், சிவில் வழக்கும் தனித்தனியாக, தனித்தனி நீதிமன்ற நீதிபதிகளால் நடத்துவதற்கு தனி நீதிமன்ற வளாகத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்று, அடுத்த ஆண்டு இந்த மாமன்றத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலையைப் படிக்கிறபோது இந்தத் திட்டத்தைச் சேர்த்துக்கொள்ளும்படி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்திலே நான் வற்புறுத்துவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]